# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

## முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல் முறையீட்டு மனு எண். 102 / 2015

திரு.அர. ஏழுமலை,
த/பெ. அர. ரங்கசாமி,
கன்னியம்மன் கோவில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம். . . . . . மேல் முறையீட்டாளர்
(திரு.அர. ஏழுமலை)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி. ரோடு,
செங்கல்பட்டு – 603 001. . . . . எதிர் மனுதாரர்
(திரு. மாலதிஸ்ரீ, செயற்பொறியாளர்/
மறைமலை நகர்)

**கேட்புரை நாள் – 10.3.2016**

**ஆணை நாள் – 18.4.2016**

திரு. அர. ஏழுமலை, சட்டமங்கலம் கிராமம், மறைமலைநகர் அவர்களின் 19.12.2015 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண்.102/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.3.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும்

இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி, மனுவிற்கு பதில் அளித்திடாததற்கும், குறைதீர்க்கும் மன்றத்தில் முறையிட்டும் உரிய பதில் கிடைத்திடாததற்கும் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள நகல்களை பார்வையிட்டு தங்களது தீர்வானது கிடைத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர், திரு.அர. ஏழுமலை அவர்கள் சர்வே எண்.258/12 ல் உள்ள இடத்திற்கு புதிதாக மின் இணைப்பு வழங்குவதை தடுத்தல் சம்பந்தமாக மின்பொறியாளர், திருப்போரூர் பிரிவு அலுவலகத்திற்கு 6.4.2013 அன்று மனு செய்துள்ளார்.

2.2 அந்த மனுவிற்கு பதில் கிடைக்கவில்லை என்று தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறப்பிடப்பட்டுள்ள ஈட்டுத் தொகை தனக்கு தரப்பட வேண்டும் என்று செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், அவருடைய கோரிக்கையை நிராகரித்து 7.11.2015 அன்று உத்தரவு இட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவில் அதிருப்தியுற்ற மேல் முறையீட்டாளர், இந்த மேல் முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளரிடம் சமர்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>**

*<u>“தீர்ப்புரை</u>*

*எனவே, மனுதாரின் கோரிக்கையான பதில் அனுப்பப்படவில்லை என்ற கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு ஆலோசனை மனுக்களுக்கு பதில் தேவைப்படுகிறது என்று தெளிவாக குறிப்பிடும் படத்தில் பதில் கிடைக்கவில்லை என்றால் உரிய அலுவலரை அணுகலாம் என விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டது”*

**4.0 <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 கடந்த 06.04.2013 அன்று தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகம் பொறியாளர் அவர்கள் திருப்போரூர் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கிடுவதை தடுத்திடுவதற்காக தபால்மூலம் மனுசெய்யப்பட்டு அத்தபாலானது கடந்த 08.04.2013 அன்று உரிய அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

4.2 அக்கடிதமனுவிற்கு பதில் கிடைத்திடாத காரணத்தினால் கடந்த 19.09.2015ல் மனுசெய்து விசாரணை நடைபெற்று கிடைத்திட்ட உத்திரவு கடிதத்தில் அனுப்பிய நாள் மற்றும் எண் குறிப்பிடாமல் கடந்த 14.12.2015 அன்று கடிதம் கிடைத்திடபெற்றது.

4.3 கிடைத்திட்ட உத்திரவு கடிதத்தில் அம்மனுவானது ஆலோசனை கடிதமாக உள்ளதால் பதில் அளிக்கவில்லை என பொறியாளர் தெரிவித்திட்டதாகவும், மன்றமும் ஆலோசனை கடிதம் தான் என முடிவுசெய்து குறிப்பிட்டுள்ளது.

4.4 மன்றகூட்டத்தில் உறுப்பினர்கள் இருவரில் ஒருவர் அல்லது சிலநேரங்களில் இருவரும் கலந்து கொள்ளாத நிலையில் மன்றதலைவரால் விசாரணை கூட்டம் நடைபெற்று முடிகின்றது. இதுகுறித்து தங்களிடம் ஆதாரத்துடன் முறையிடமுடியாத சூழ்நிலை.

காரணம்: கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பம் இடவேண்டுமென்ற காரணத்தினால் விசாரணை பதிவுநகல் வழங்கிடுவது கிடையாது.

4.5 எனவே, தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி மனுவிற்கு பதில் அளித்திடாததற்கும், குறைதீர்க்கும் மன்றத்தில் முறையிட்டும் உரிய பதில் கிடைத்திடாததற்கும் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள நகல்களை பார்வையிட்டு தங்களின் தீர்வானது கிடைத்திட வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

5.0 <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1 மனுதாரர் அனுப்பிய கடிதம் இளநிலை பொறியாளர்/இப/திருப்போரூர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

5.2 மனுதாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விண்ணப்பமனு பெறப்பட்டு, அதற்குரிய ஒப்புகையும் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது (இணைக்கப்பட்டுள்ளது) அதன் அடிப்படையில் 07.11.2015 அன்று மன்றம் கூட்டப்பெற்று மனுதாரரின் மனு விசாரணை செய்யப்பட்டு மனுதாரருக்கும் உத்தரவு தெளிவாகவே அனுப்பப்பட்டுள்ளது.

5.3 மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து மனுதாரரின் கடிதத்தை நன்கு படித்த பிறகே முடிவு செய்யப்பட்டது (மனுதாரரின் கடிதம் இணைக்கப்பட்டள்ளது).

5.4 07.11.2015 அன்று நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 11 மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, விசாரணை நடைமுறையில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மனுதாரர் மற்றும் வாரிய தரப்பு ஆகிய அனைவரிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

**6.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

6.1 இருதரப்பினரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.3.2016 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு.ஏழுமலை அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. மாலதிஸ்ரீ செயற்பொறியாளர், மறைமலைநகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

**7.0 மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:**

7.1 மேல்முறையீட்டாளர் திரு.அர. ஏழுமலை தன்னுடைய 6.4.2013 நாளிட்ட கடிதம் 8.4.2013 ல் இளநிலை பொறியாளர் திருப்போரூர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்பதற்கு தபால் துறையின் ஒப்புதல் அட்டை உள்ளது என்று தெரிவித்தார்.

7.2 மேலும், மேற்கண்ட மனுவிற்கு மேற்கண்ட அதிகாரியிடமிருந்து எந்த பதிலும் பெறப்படவில்லை என்றும் எனவே, மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதித்தொகுப்பின் விதியின் படி, அவருக்கு ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

7.3 மேலும், தன்னுடைய மனுவிற்கு குறிப்பிட்ட நாட்களுக்குள் பதில் அளிக்கவிடில், உரிமம்தாரர் ஈட்டுத்தொகை செலுத்த வேண்டும் என்ற விதி உள்ளது தற்பொழுதுதான் தெரியும் என்பதால் தான், அவர்கள் தாமதமாக மேற்கண்ட மனுவை மன்றத்திற்கு சமர்பித்துள்ளார் என்று வாதிட்டார்.

**8.0 <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>:**

**8.1** திருமதி. மாலதிஸ்ரீ, செயற்பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**8.2** செயற்பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் மேல்முறையீட்டாளர், மனுவில், மேல்முறையீட்டாளர், சர்வே எண். **258/12** ல் **17** பேருக்கு உரிமை உள்ளது. எனவே, அந்த சர்வே எண்ணில் புதிதாக வீடு, வாகனம், கட்டுமான பணி சிறுதொழில் போன்றவற்றிற்கு மின் இணைப்பு கோரினால் அவ்விடத்திற்கான பத்திரத்தை ஆய்வு செய்து அதன்பின் மின் இணைப்பு கொடுக்க மறுப்பு தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளதால், அது ஒரு தகவலைத் தெரிவிக்கும் ஆலோசனை கடிதம் என்று தான் எடுத்துக் கொள்ள முடியும் என்றும் அதற்கு பதில் தேவையில்லை என்றும் வாதிட்டார்.

**9.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

**9.1** மேல்முறையீட்டாளர், தன்னுடைய **6.4.2013** நாளிட்ட மனுவில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின்பொறியாளர், திருப்போரூர், அவர்களுக்கு சர்வே எண். **258/12**–ல் மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக முறையீடு செய்யப்பட்டது என்றும், அதை **8.4.2013**–ல் பெற்றுக் கொண்ட பொறியாளர் அவர்கள் அதற்கு தனக்கு பதில் எதுவும் தரவில்லை என்று தெரிவித்து, அவருக்கு, தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திற செந்தரங்களின்படி, ஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

**9.2** எதிர்மனுதாரர், மேற்கண்ட மனு பெறப்பட்டுள்ளது என்றும் அந்த மனுவில் மேல்முறையீட்டாளர் கோரிக்கை எதுவும் தரவில்லை என்றும், அது ஒரு ஆலோசனை கடிதம் என்பதால், அதற்கு பதில் எதுவும் தரவில்லை என்று வாதிட்டுள்ளார்.

9.3 மேல்முறையீட்டாளர், மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதியை குறிப்பிட்டு, ஈட்டுத்தொகை கேட்டுள்ளதால் மேற்கண்ட விதித்தொகுப்பின் விதி 17 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"17. Responding to Consumer's Complaint If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter."*

9.4 மேற்கண்ட விதியின்படி, ஒரு நுகர்வோரின் எழுத்து வடிவில் சமர்பிக்கப்பட்ட முறையீட்டிற்கு சம்பந்தப்பட்ட பகுதிப் பொறியாளர், அந்த கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதிலளித்தல் வேண்டும், விரிவான பதில் அளிப்பதற்கு இடத்தை பார்வையிட வேண்டும் என்ற நிலை அல்லது பிற அலுவலரிடம் கலந்தாய்வு செய்ய வேண்டிய நிலையில், நுகர்வோருக்கு ஏன் பதில் உடனே அளிக்க முடியவில்லை என்பதை விளக்க வேண்டும். மேலும், அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி தொலைபேசி எண் ஆகியவற்றை தெரிவித்தல் வேண்டும். மேலும் முறையீட்டை பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு பதில் அனுப்பப்பட்டுவிட்டதா என்பதையும் பகுதிப் பொறியாளர், உறுதிபடுத்தி கொள்ளவேண்டும் என்றும் தெரிகிறது.

9.5 எதிர்மனுதாரர் அந்த கடிதம் ஒரு ஆலோசனைக்கடிதம் தான் அதற்கு பதில் எதுவும் தேவையில்லை என்பதால் அந்த கடிதத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“அர.எழுமலை, த.பெ ரங்கசாமி,*
*கன்னியம்மன் கோவில் தெரு, மேட்டுக்காடு, சட்டமங்கலம் கிராமம்,*
*மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம் **603 209.***

---

*பெறுநர்:–*
*திரு. மின்பொறியாளர் அவர்கள்,*
*தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இ–ப,*
*திருப்போரூர் பிரிவு, செங்கை மின்பகிர்மான வட்டம்,*
*காஞ்சிபுரம் மாவட்டம்*

*பொருள் :–* <u>*சர்வே எண்.258/12ல் உள்ள இடத்திற்கு புதிதாக மின்இணைப்பு வழங்கிடுவதை தடுத்தல் மனு :–*</u>

*காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், பகுதிக்குட்பட்ட வென்பேடு கிராமத்தில் சர்வே எண்.**258/12**ல் தவறான ஆவணங்கள் பெறப்பட்டு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுபோல் அவ்விடம் **17** நபர்களுக்கு உரிமையுடையது. சர்வே எண்.**258/12**ல் புதிதாக வீடு, வணிகம், கட்டுமானபணி, சிறு தொழில்கள் போன்ற பணிகள் தொடங்கிடுவதற்கு மின்இணைப்பு கொடுத்திடுவதை தடுத்தும் இதுநாள் வரை செட்டில்மெண்ட் அல்லது பாகப்பிரிவினை செய்யப்படாத காரணத்தால் அவ்விடத்திற்கான பத்திரத்தினை முழு ஆய்வு செய்து அதன் பின் மின்இணைப்பு கொடுத்திடுவதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இப்படிக்கு*

*ஒப்பம்/–*
*(அர.ஏழுமலை)*

<u>*குறிப்பு*</u> *:–*

*சர்வே எண்.**258/12** ஆனது பட்டா எண்.**739**ல் **17** நபர்களுக்கு கூட்டுபட்டா இடமாகும் கூட்டுபட்டா இடம் என ஒருசில பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் பத்திர பதிவில் முறையான **17** நபர்களுக்கான பாகப்பிரிவினை பற்றி குறிப்பிடப்படவில்லை அவ்விடம் விஸ்தீரணம் **0.22** ஏர் ஆகும். (ஏற்கனவே கொடுத்திட்ட பத்திரத்தில் சர்வே எண்.**258/12** ஆனது விஸ்திரனம் **0.22** ஏர் என பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளதை கவனிக்காமலும் கொடுக்கப்பட்ட பட்டாவில் **258/12** பி என குறிக்கப்பட்டுள்ளதை கவனிக்காமலும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.(572–008–577) பெறப்பட்டுள்ளது. இணைப்பு –* <u>*பட்டா எண்.739ல் 17 நபர்களுக்கு கூட்டுபட்டா ஆதார நகல்.*</u>*”*

**9.6** மேற்கண்ட மனுவை படித்து பார்க்கும்பொழுது நாம் அறிவது சர்வே எண்.**258/12** என்ற இடம் **17** நபர்களுக்கு உரிமை உடையது. அதில் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை அதில் தவறான ஆவணங்கள் பெறப்பட்டு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய வீடு, வணிகம், கட்டுமான பணி, சிறு தொழில்கள் போன்ற பணிகள் தொடங்குவதற்கு மின்இணைப்பு கொடுப்பதை தடுக்க வேண்டும் என்றும், அந்த இடத்திற்கான பத்திரத்தை முழு ஆய்வு செய்து அதன்பின் மின்இணைப்பு கொடுப்பதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பில் தவறாக கொடுக்கப்பட்ட மின்இணைப்பு எண் தரப்பட்டுள்ளது.

**9.7** இதில், பாகப்பிரிவினை செய்யப்படாத இடம் என்பதால் **258/12** என்ற சர்வே எண்ணில் புதிய மின்இணைப்பு வழங்கும் பொழுது அதன் பத்திரம் முழுமையாக ஆய்வு செய்யப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**9.8** எனவே, மேற்கண்ட மனுவில் சர்வே எண்.**258/12** என்ற இடம், பாகப்பிரிவினை செய்யப்படாத இடம் என்றும் அதில் மின்இணைப்பு வழங்கும் பொழுது பத்திரத்தை முழுமையாக ஆய்வுசெய்து அதன்பின் மின்இணைப்பு கொடுக்கவேண்டும் என்ற தகவல் , மின் பொறியாளர், திருப்போரூர் பிரிவு அவர்களுக்கு வெறும் தகவலுக்காக மட்டுமே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரரின் வாதமான அது ஒரு ஆலோசனைக்கடிதம் என்பதை புறந்தள்ளிவிட முடியவில்லை.

**9.9** மேலும், ஈட்டுத்தொகை என்பது ஒரு தண்டனை (Penal Provision) ஆகும். எனவே, அந்த தொகை உரிமைதாரர் செலுத்த வேண்டும் என்று உத்தரவு இடும்பொழுது அதற்கான காரணம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணமாக வேண்டும். இங்கு கடிதத்திற்கு பதில் தரவில்லை என்பது உண்மை நிலவரம். ஆனால், பதில் கட்டாயம் தரவேண்டும் என்ற நிலையிலுள்ள மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் பதில் தரப்படவில்லை எனில் ஈட்டுத்தொகை வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

9.10 மனுதாரர், அந்த நிலத்தின் உரிமைதாரர் என்றோ அல்லது அந்த இடத்தில் மின்இணைப்பு கொடுக்க கூடாது என்றோ தன்னுடைய ஆட்சேபனை எதையும் தெரிவிக்கவில்லை. மாறாக, அது ஒரு கூட்டுப்பட்டா உள்ள இடம், எனவே, பத்திரத்தினை முழுமையாக ஆராய்ந்து மின் இணைப்பு கொடுக்க மறுப்பு தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆகவே, அது ஒரு தகவலை மின்இணைப்பு வழங்கும் அதிகாரிக்கு தெரிவித்து, அந்த சர்வே எண்ணில் மின்இணைப்பு வழங்கும்பொழுது கவனமாக ஆவணங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் கடிதமாகத்தான் எடுத்து கொள்ள முடியும். மேற்கண்ட மனு, ஒரு ஆலோசனைக்கடிதமாக கருதப்படுவதால் அதற்கு தேவையான நடவடிக்கை சர்வே எண்.258/12 என்பது கூட்டுப்பட்டா என்பதால் அந்த சர்வே எண் உள்ள நிலத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் பெறப்பட்டால் மின்சார இணைப்பு கோரும் விண்ணபத்துடன் சமர்ப்பிக்கப்படும் உரிமைக்கான பத்திரம் கவனமாக முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு சரியாக இருப்பின் மின்இணைப்பு வழங்கலாம் என்பது ஆகும். மனுவினை எழுதியவரின் நோக்கமும் அந்த தகவல் மின்வாரிய அதிகாரியிம் சேர வேண்டும் என்பதுதான். அந்த கடிதம், ஒப்புதல் அட்டையுடன் பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் உரிய அலுவலகம் சென்று அடைந்துவிட்டது மனு பெறப்பட்டுள்ளது என்பதும் உரிமம்தாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் நோக்கம் நிறைவேறிவிட்டதாக நான் கருதுகிறேன். மேற்கண்ட நிலையில் ஒரு ஆலோசனை கடிதத்திற்கு பதில் தரப்படவில்லை என்று ஈட்டுத்தொகை செலுத்தவேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** முடிவுரை

**10.1** மேற்கண்ட பத்தி எண்.**9.10**இல் உள்ள தீர்வின்படி செங்கல்பட்டு மின்பகிர்மான வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**102/2015** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு.அர. ஏழுமலை,
த/பெ. அர. ரங்கசாமி,
கன்னியம்மன் கோவில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி. ரோடு,
செங்கல்பட்டு – 603 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி. ரோடு, செங்கல்பட்டு – 603 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.